யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	பிங்கள ஆண்டு மாசித் திங்கள் February—1978	இதழ் 2

ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியுய் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்
கூடிய வாறே குறியாக் குறிதந்தென்
ஊடுநின் ருனவன் தன்னரு ளுற்றே

திருவருளின் துணையால் ஆடுதல், பாடுதல் இன்பக் கண்ணீர் உகுத்தல், ஓலமிடுதல் செல்லுமிடங்களிலெல்லாம் அவனையே நாடுதல் ஆகிய நற்செயல் பலபுரிந்து சிவபெருமானின் அளவற்ற தன்மையை அவன் உணர்த்த உணர்ந்தேன். உயிருக்கு உயிராகக் கலந்த இயல்போடு புருவ நடுவின்கண் அறிவாலன்றி அருளால் உணரும் திருவடியைத் தந்தருளி வெளிப்பட்டு நின்றனன்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

ஆன்மா தன்முனைப்பற்ற நிலையில் திருவருள் துணையால் நிட்டை கூடும். நிட்டையில் ஆழ்ந்தவர்க்கே பிறவாமையுங் கூடும்.

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

24—3—78 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும்.

1. யோகாசன ஆலயம், 16-A, வன்னியர் முதல் தெரு, சூளைமேடு, சென்னை-600 094.
2. அருள்மிகு மன்னார்சாமி கோவில், மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம். சென்னை-600 013.
3. சுந்தர விநாயகர் கோவில், செங்கல்பட்டு, சின்னநத்தம்.

வேள்விப் பயிற்சி வகுப்பு

12—3—78 ஞாயிறுகாலை 10 மணிக்கு ஷ யோகாசன ஆலயத்திலும். 26—3—78 ஞாயிறுகாலை 10 மணிக்கு புரசைப்பாக்கம் செல்லப்ப கிராமணி தெரு, எண் 13, இல்லத்திலும் வகுப்பு நடைபெறும், யாவரும் கலந்துகொள்க!

'கைவல்யம்' வேதாந்த உரை

பிரதி புதன்கிழமை இரவு 7 மணிக்கு சென்னை லிங்கி செட்டி தெரு, எண் 121, அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில், யோகாசன ஆலய நிறுவனரும், தலைவருமான உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் 'கைவல்ய நவநீதத்திற்கு' வேதாந்த விளக்கவுரை நிகழ்த்துகின்றார்கள். யாவரும் கலந்து கொண்டு நற்பேறு பெறுக!

C. இராமசாமி,
பொதுச் செயலர்,
யோகாசன ஆலயம்.

மகரிஷி தாயுமானவர்

தன்னையொருவர்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

பொருளைப், பூவைப், பூவையரைப்
பொருளென் றெண்ணு மொருபாவி,
இருளைத் துரந்திட் டொளி நெறியை
யென்னுட் பதிப்ப தென்று கொலோ?
தெருளத் தெருள வன்பர் நெஞ்சந்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே!
அறிவா னந்தத் தாரமுதே!

பதவுரை

தெருள தெருள – (மனம்) தெளியத் தெளிய, அன்பர் – அடியார்கள், நெஞ்சம் - மனத்தின்கண், தித்தித்து - இனித்து, உருக - உருகும்படி, தெவிட்டாத - வெறுக்காத, அருளை - கிருபையாகிய மழையினை, பொழியும் – சொரிகின்ற, குணமுகிலே!-குணமேகமே!, அறிவு-அறிவு சொருபமாகிய! ஆனந்தத்து -ஞானனந்தமாகிய, ஆர்-அருமையான, அமுதமே!-அமிர்தமே!, பொருளை - திரவியத்தினையும், பூவை - பூமியையும், பூவையரை – மாதரையும், பொருள் என்று - உண்மைப் பொருள்களென்று, எண்ணும் - நினைக்கின்ற, ஒருபாவி - ஒருபாவி, இருளை – அஞ்ஞான விருட்டினை, துரந்திட்டு - நீக்கிவிட்டு, ஒளி நெறியை-ஒளியையுடைய சன்மார்க்கத்தினை, என்னுள் - அடியேன் மனத்தின் கண்ணே, பதிப்பது-பதியச்செய்வது, என்று கொல்?-எந்நாளோ?, அறியேன், என்க.

கருத்துரை

நின்பால் அன்புகொண்ட அடியவர்களின் உள்ளம் தெளிவடைய தெளிவடைய, அவர்களிடத்து சுவைகுன்றுததேன் போன்ற அருள் மழையைப் பொழிகின்ற குணக்குன்றே! அறிவானந்தமாகிய அமிர்

தமே! பாவியாகிய யான் உலகத்தையும் உலகப் பொருள்களையும் மாதரையுமே உண்மைப் பொருளென நினைத்திருக்கின்றேனே; அறியாமையாகிய என் இருளை அகற்றி ஒளி நெறியாகிய சன்மார்க்கத்தினை என்னுள்ளத்தில் பதியச்செய்வதுதான் எந்நாளோ? என்று இறைவனை நினைந்து இறைஞ்சுகின்றார் தாயுமான அடிகளார்.

விரிவுரை

பாசி படர்ந்தகுளம் போன்று மனமானது அழுக்காறு, அவா, வெகுளி, போன்ற தீய நினைவுகளால் மாசு படிந்திருக்கிறது. குளத்தினில் கல்லெறிந்தால் பாசி அகன்று நீர் தெளிவடைவதுபோல மனதினை சும்மா விருக்கச்செய்து, குருவானவர் கொடுக்கின்ற உபதேசமெனும் ஒரு மொழியை உணர்கின்றபோது மனமாசு அகன்று அறிவு, தெளிவடைகின்றது. இதனைக் "கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணு நல்லோர் சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே என்பர் தாயுமானுர். "சித்தவிருத்தி நிரோதஹ" என்று யோகசூத்திரம் பகர்கின்றது. முதலில் ஓரிடத்தமர்ந்து உடலை அசைவற இருக்கப் பழகுதல் வேண்டும். இதனைத் தாயுமானவர் வெறும் நூல்களை மட்டுமே படித்துப் படித்து நாளைப் போக்குகின்றேனே அன்றி, மனதினை அசையாமல் இருத்திவைக்கத் தொடர்ந்து பயிற்சி செய்யவில்லையே என்கிறார். "வாசா கைங்கர்ய மன்றியொரு சாதனம் மனோவாயு நிற்கும் வண்ணம் வாலாயமாகப் பழகி யறியேன்."

ஆண்டவன் பால் நிறைவுள்ளத்துடன் நம்பிக்கைக்கொண்டவர்களையே அன்பர் அல்லது அடியார் என்கிறோம். சமயங்கள் பல இருப்பினும் அவ்வச்சமயங்களில் உள்ளவர்கள் அவரவர் தெய்வங்களை நம்பித் துதிப்பதால் அவர்களும் அன்பர்களேயாம். சமயங்களைக் கடந்து சன்மார்க்க நெறியாகிய மௌனநிலையைக் கடைப்பிடிப்பதே வீட்டு நெறியைக் கூட்டுவிக்கும் ஒரே நெறியாகும். மௌன நிலையில் சொல்வதற்கு அறிய இன்பம் பிறக்கிறது. அவ்வின்பச் சுவையை அறுசுவைகளுள் தலையாய சுவையாகிய இனிப்புச் சுவைக்கு ஒப்பாகக் கூறுவர். இந் நிலையில் இனிப்பது எது? சுவையை அறிவது எது? என்பதெல்லாம் குரு மாணுக்கர் விசாரணையில் விளங்கும். இங்ஙனம் இனிக்கின்ற இடத்திலேயே, சாதகன் நிலைத்து நிற்கவேண்டும். பாரணைத்துந் துறந்த பட்டினத்தடிகள் இந்த இடத்தில் நிலைத்து நின்றார். அக்கருத்தை ஓவியர் பட்டினத்தடிகள் கையில் கரும்பு பிடித்து நிற்பதுபோல ஓவியம் தீட்டினர்.

அவ்வின்பத்தில் திளைக்கத் திளைக்க மனம் உருகுகிறது. அஃதாவது பக்குவப்படுகிறது. மனம் உருகுவதால் அனைத்துமே உருகுவது போன்று தென்படும். இவ் வுபாயத்தைச் சுட்டிக்காட்டுபவர் ஆசிரியர் ஆவார். உலகத்துக்கெல்லாம் பொதுமொழியாம் ஒரு மொழியால் உணர்த்துகின்றார். பட்டினத்தடிகளாருக்குத் தன் ஆசாரியன் உணர்த்திய ஒரு மொழியினுல் மண் முதல் நாத மீருன தத்துவங்கள் உருகியது. ஆண், பெண் பேத, அபேதங்களெல்லாம் உருகிற்று; சிவபெருமான், உமையவள், திருமால் அனைவருமே உருகினர் என்கின்றார்.

இங்ஙனம் யாவு மற்ற சீவன் தனித்திருக்கும்போது ஏற்படும் இன்பம், சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாத இன்பமாம். இவ் வின்பத்தில் திளைத்திருப்போர்க்கு இறைவன் திருவருளை மழைமுகில்போல வழங்குகின்றான். அவ்வமயம் இறைவனுக்கும் சீவனுக்கும் தொடர்பு

ஏற்படுகிறது. இது யோக அங்கம் எட்டனுள் ஆருவது படியான தாரணையாகும். துரியோதனனுடைய அரசவையில் துச்சாதனனுல் திரௌபதியின் ஆடை களையப்பட்டபோது, அவளின் மானம் பறி போகாதவாறு கண்ணபிரான் ஆடையைத் தொடர்ந்து கொடுத்து காத்ததுபோல சீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் ஏற்படும் உணர் வுத் தொடர்பாகும். நம்முடைய சாதனையெல்லாம் ஓரளவேயாகும். நிறைவு செய்வது இறைவனின் திருக்கருணையேயாகும்.

இந் நிலையில் இறைவன் அறிவினிடத்துப் பேரானந்தமாகிய அமிர்தத்தை வாரி வழங்குகிருன். இதுவே பேரின்பம் எனப்படுவது. இதனைத் தாயுமானவர் ஆனந்தக் களிப்பு எனுந் தலைப்பிலே இறுதி யாக அறுதியிட்டுக் கூறுகின்ருர் :

அன்றென்றும் ஆமென்றும் உண்டோ-உனக்கு
ஆனந்தம் வேண்டின் அறிவாகிச் சற்றே
நின்ருல் தெரியும் எனவே-மறை
நீதி எம் மாதி நிகழ்த்திஞன் தோழி-சங்கர சங்கர சம்பு

இதுகாறும் கூறிய கருத்துக்களே தாயுமான அடிகளார்,

" தெருளத் தெருளஅன்பர் நெஞ்சந்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குண முகிலே
அறிவானந்தத் தாரமுதே" என்றனர்.

இக்கருத்துச் செறிந்த மற்ருெரு பாடலையும் தாயுமானவப்
பேரருளாளர் " நமக்கு வழங்கியுள்ளார் ;

என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடல்
இளகமன தழலின் மெழுகாய்
இடையரு துருகவரு மழைபோ லிரங்கியே
இருவிழிகள் நீரிறைப்ப
அன்பிஞல் மூர்ச்சித்த அன்பருக் கங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்
தானந்த மழைபொழிவை உள்ளன்பி லாதஎனை
யார்க்காக அடிமை கொண்டாய்?"

இங்ஙனம் பேரானந்தத்தை யடைய வொட்டாமல் சீவனைத் தடைப்படுத்துவது யாதெனில் மூவேடணைகளாகிய மண், பொன், பெண் ஆகும். அடிகளாரை துன்புறுத்தியவையும் இவையே என்பதைப் "பொருளைப் பூவைப் பூவையரைப் பொருளென்றெண் ணும் ஒருபாவி" என முதலடிகளில் விளக்கியுள்ளார்.

பட்டிணத்தார், அருணகிரிநாதர், தாயுமானவர், வள்ளலார் போன்ற சான்ருேர்கள் அனைவருமே இம் மூன்றினைப் பழித்தும் வெறுத் தும் கூறியிருக்கின்றனர். காரணம்? அவர்கள் காலத்தில் உலகாய தம் எனும் சமயம் மிகப் பரவலாகியிருந்ததேயாகும். "உலக நடை ஐய ஒரு சொப்பனத்திலும் வேண்டிலேன்" என்றும், தரணிமிசை லோகாயதன் சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவாநு பூதி மன்ன ஒரு சொற் கொண்டு எனைத் தடுத்து அன்பின் வாழ்வித்த

ஞான குருவே'' என்றெல்லாம் தாயுமானவர் இயம்பியுள்ளதைக் காண்க !

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் விளங்கும் பரம் பொருளை விடுத்து. அநித்தியமாகிய உலகப் பொருள் களையே நினைந்து பாவியாகிய யான் வாழ்கின்றேனே என ஏங்குகின் றார் சுவாமிகள், பதி, பசு, பாசம் எனும் முப்பொருளைக் குருவாயிலாக விசாரணை செய்த பின்பே ஏடணைகளாகிய முப் பொருளின் நிலை யாமை விளங்குகிறது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப(து) அறிவு - என்பர் பொய்யா மொழியார்.

தெளிந்த ஞானியரையும் மருட்டும் வல்லமை படைத்தது இவ் வேடணைகள் என்பதை விப்பிரநாராயணரின் வரலாற்றினின்றும் அறிகின்றோம்.

பன்னிரு ஆழ்வார்களுள் தொண்டரடிப் பொடி ஆழ்வார் எனப் படுபவரே இவ் விப்ரநாராயணர். சோழநாடு சோறுடைத்து எனப் போற்றப்படும் வளநாட்டில், திருமண்டங்குடி என்ற கிராமத்தில் அந்தணர் குலத்தில் பிறந்த இவர் சிறுவயது முதற்கொண்டே திருமா லடத்துப் பேரன்பு பூண்டொழுகினார். விளையாடும்போதும் கண்ண னுடைய விளையாட்டாகவே ஆடுவார், விளையும்பயிர் முளையிலே தெரியும் என்பர். இராமகிருஷ்ண பரமஹம்சர் தன் சிறுவயதில் பெண் வேடம் பூண்டு கோபியாக தன்னைப் பாவித்துக்கொண்டு கண்ணனை மணப்பதுபோல விளையாடுவாராம். இது பிறவி வாசனையேயாகும். இங்ஙனம் வாலிபப் பருவம் எய்திய விப்ரநாராயணர் திருமாலிடத்துக் கொண்ட காதலினால் உலக சிந்தனை யற்று ஆண்டவன் பணியே செய்துவந்தார். நந்தவனம் ஒன்று அமைத்துப் பகவானுக்குச் சூட் டுவதற்காக மலர்ச்செடி கொடிகளைப் பயிரிட்டு வளர்த்தார். நாள் தோறும் களைபறித்து நீர் பாய்ச்சிப் பாதுகாத்து வந்தார். இதே போன்று உள்முகமாகவும் மனதிலிருந்து எழும் எண்ணங்களாகிய களைபறித்து அன்பெனும் நீர் பாய்ச்சி ஆன்மீகப் பயிரையும் வளர்த்து வந்தார். இங்ஙனம் நாள்கள் பல செல்ல, அடியார் பலருக்கும் ஏற் பட்ட சோதனை இவரையும் விடவில்லை;

திருக்கரம்பனூரில் தாசிகுலத்தில் பிறந்த சகோதரிகள் இருவர் ஒருநாள் நந்தவனம் வழியாக வந்தனர், நந்தவனத்தின் கவர்ச்சி அவர் களைக் கவர்ந்தது. ஆஹா இவ்வளவு அருமையான வனத்தை அமைத்தவர் யாரோ ?' என்று வியப்புற்றவர்களாக அழகை ரசித்துக் கொண்டேவந்தனர். செடிகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண் டிருந்த கட்டிளங்காளை விப்பிரநாராயணரைக் கண்ட இளையவள் தேவ தேவி சித்திரப்பதுமையாக நின்றாள்! கோதி முடித்த கூந்தல், ஒளிப் பிழம்பை அள்ளிவீசும் முகம், மலைபோன்ற தோள்கள், கட்டழகான உடல் இவை தேவ தேவியின் உள்ளத்தைக் கவர்ந்தன. அவருடைய செவியில் விழுமாறு சில அன்பு வார்த்தைகள் பேசினாள்; அவருடைய உள்ளத்தைக் கவரும் எண்ணத்தோடு சாகசச் செயல்கள் பல புரிந் தாள். ஆனால் அவரோ, 'பண்ணேன் உனக்கான பூசை ஒரு வடிவிலே பாவித்து இறைஞ்ச ஆங்கே பார்க்கின்ற மலருடு நீயே இருத்தி ''என தாயுமானவர் மொழிந்தவாறு செய்யும் பணியில் கண்ணனையே கண் டார், அவருடைய உணர்வுகள் உள்முகமாகவே இருந்தன உயிரற்ற வெற்றுடலாகவே கருவியாகப் பணியாற்றினார்.

தேவதேவியின் முயற்சிகள் தோல்வியுற்றதைக் கண்ட தமக்கை ஏளனம் செய்தாள். அடி! உன் ஆடலும் பாடலும் இவரிடம் ஒன்றும் பலிக்காது; வந்தவழியே செல்வோம்வா! என்ருள். தேவ தேவிக்கு ஆத்திரமாகவந்தது. தோல்வி ஒருபுறம்; தமக்கையின் ஏளனம் மறுபுரம். சீறிவிழுந்தாள் தமக்கைமீது. ஏடி! உனக்கு ஏளனமாக இருக்கிறதா? என்ருள், உன் வலையில் அவர் அகப்படமாட்டாரடி! அகப்பட்டால் நான் உனக்கு அடிமையாகின்றேன் என்ருள் தமக்கை. தேவ தேவி மேலும் ஆத்திரமடைந்தாள். உனக்காகவே இவரை என் அடிமையாக்குகிறேன்! இல்லாவிட்டால் நான் உனக்கு அடிமையாகிறேன் என சபதம் கூறினுள். அதையும் பார்க்கிறேன் என ஏளனமாகச் சிரித்தாள் தமக்கை இருவரும் வீடு திரும்பினர்.

தேவ தேவி பசியை மறந்தாள். உறக்கமும் கொள்ளவில்லை. விப்ரநாராயணரை எப்படியும் தன் வயப்படுத்தவேண்டும் என்று, "மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுள எலாமுறங்கும் கண்ணுறங்கேன் எம் மிறைவர் காதலால் பைங்கிளியே" என்று தாயுமானவர் ஏக்கமுற்றதுபோல கிடந்தாள். 'அரகரா' என்று முருகப்பெருமானை அழைப்பதுபோல சேவல் குரலொலி எழுப்பி விடிந்ததை உணர்த்திற்று. ஒரு முடிவுக்கு வந்தவளாய் படுக்கையினின்றும் எழுந்தாள் தேவ தேவி, கவர்ச்சி மிகு ஆடைகளை விடுத்து தூய வெண்ணிற ஆடையை உடுத்திக்கொண்டாள். துறவிபோல கூந்தலை முடித்துக் கொண்டாள் புறப்பட்டாள் நந்தவனத்திற்கு!

நெடுந்தூரம் நடந்து களைத்தவள்போல விப்பிரநாராயணரின் திருவடிகளில் வந்து வீழ்ந்தாள். திருவடிகளைப் பற்றிக்கொண்டு ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள்! என்று கண்ணீர்விட்டுக் கதறி யழுதாள்.

> "உள்ள மறிவாய் உழப்பறிவாய் நான் ஏழை
> தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே"

என்பர் தாயுமானுர், தஞ்சம் புகுந்தோரைத் தள்ளாது காப்பவரே எவ்வுயிரும் தன்னுயிராகப் பாவிப்பர், எனவே தேவ தேவியின் தஞ்சம் விப்ரநாராயணரின் உள்ளத்தை நெகிழச் செய்தது. அம்மா! நீ யார்? ஏன் இந்த ஏக்கம்? என்று அன்போடு கேட்டார், சுவாமி! நாயினும் கடைப்பட்ட பாவி நான். என் தீவினையால் தாசி குலத்தில் பிறந்தேன்-என்னையும் அவ்விழி தொழிலில் ஈடுபடுமாறு என தாய் என்னைத் துன்புறுத்துகிருள். என் உள்ளமோ ஆண்டவனுக்காகவே இவ்வுடலை அர்ப்பணிக்கவேண்டும் என பேரவா கொண்டுள்ளது. தாங்களே என்னைக் காத்து அருள்புரியவேண்டும். நீங்கள் புறக்கணித்தீரானுல் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லை! என்று புலம்பினுள். சுண்ணும்புநீர் போன்ற உள்ளமுடைய தேவ தேவியைப் பாலெனவே நம்பினுர் விப்ரநாராயணர். அடைக்கலம் அளித்தார். ஆண்டவன் பணியில் அவளுக்கும் பங்களித்தார்.

மாதங்கள் பல உருண்டோடி மறைந்தன. தேவ தேவியின் கவர்ச்சி மிகு செயல்களோ நாளுக்கு நாள் அளவுகடந்து வெளிப்பட்டன. விப்ரநாராயணர் தோட்டம் புகும்போதெல்லாம அவருடன் நெருங்கி தண்ணீர் இரைத்துக்கொடுப்பது, களைபறிப்பது, மலர் கொய்வது, மாலை தொடுப்பது ஆகிய செயல்களை உள்ளொனறுவைத்துப் புறமொன்று செய்தனள், ஆயினும் அவளின் முயற்சி கடுகளவேனும் பயன் தரவில்லை. அவளும் மனந்தரவில்லை. என்றேனும் தன் முயற்சி வெற்றியே தரும் என உறுதி பூண்டாள்.

மாயாசக்தியின் வலிமை சொல்லுந்தரமன்று விப்பிரநாராயண ரிடமும் தன் வலிமையைப் புகுத்தியது. இயற்கையும் துணை நின்றது. ஒருநாள் நள்ளிரவு மேகம் இருண்டது இடியொலி இடித்துச் சிரித்தது. அடைமழை பொழிந்தது. திண்ணையில் ஒதுங்கியிருந்த தேவ தேவி பூரணமாக நனைந்தாள் - குளிர் நடுக்கம் தாளாமல் தவித்தாள். ஆசிர மத்துள் இருந்த விப்பிரநாராயணர் மனமிரங்கினுர். ஆசிரமத்தினுள் தங்குவதற்குச் சற்றே இடமளித்தார். பற்றினுள் முழு இடத்தையும் தேவ தேவி! "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்பதுபோல வாட்டத்தோடு நாட்டமிட்டிருந்த தேவ தேவிக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது. நழுவ விடுவாளா? விப்ர நாராயணருடைய உணர்ச்சிகளை நழுவச் செய்தாள்; ஆட்கொண் டாள்! என்னே மாயையின் சக்தி? ஆண்டவன் அடிமையாயிருந்த விப்ரநாராயணர் தாசியின் அடிமையானுர்! இளமை சதிசெய்தது! மோக வலையில் சிக்கினுர்.

ஸ்ரீமந் நாராயணனுடைய சிந்தனையாகவே இருந்தனர், தலைகீழ் மாற்றமடைந்து தேவ தேவியின் திருவடிகளே தஞ்சம் என ஆனுர்.

இத்தகைய அடியார்களையும் ஞானியரையும் இறைவன் தன் மாயாசக்தியால் துன்புறுத்துவது முறையாமோ? எனில் கைவல்யம் வருமாறு பதிலுரைக்கின்றது ;

இங்ஙனம் கூறுவது வேத சாத்திரம் கூறும் அறநெறியை மறந்த அஞ்ஞானியாரின் மயக்கவார்த்தைகளாகும். "சுருதி நூற்பொருள் மார்க்கம் மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண்" என்கிறது. அன்றியும், ஈஸ்வரபடைப்பு, சீவர்களின் படைப்பு என இருவேறு வகையுள. அண்டகோளங்கள் தாவரசங்கமங்கள் ஆகிய அசையும் அசையாப் பொருளனைத்தும் ஈஸ்வரபடைப்பு. நான் எனும் அகந்தை யோடு எனது எனும்பற்றுக் கோடுகொண்டு செய்யும் செயலனைத்தும் சீவர்களின் படைப்பு என்கிறது.

" திகழ்ந்த ஈசனுர் சிருட்டியுஞ்சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற்பொது ஈசனுர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்கள் ஆசைகள் இவையெல்லாம்
நிகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாகுங்காண் நிலமனுர் செயலன்றே "

எனவே பிரளயகாலம் எனப்படும் யுக முடிவில் பஞ்ச பூதங்களும் ஒன்ருேடு மாறுபட்டு ஒழிய, பிறவியை ஒழித்தவர்கள் யார்? எனில், தேசம் காலம் தேகம் ஆகிய ஈஸ்வரப்படைப்பு உள்ளபோதே சீவர் களின் படைப்பான காம முதலியவற்றை அகற்றி விவேகத்தினுல் சீவன் முத்தனுனுர்கள். ஆகையினுல் காம வெகுளி மயக்கங்கள் சீவர்களின் படைப்பேயன்றி ஈஸ்வரப் படைப்பாகா என்பதை,

"ஈசர் காரியம் பிரளயத் தொழியவும் எவர்பவம் ஒழிந்தார்கள்
தேச காலதே காதிகள் இருக்கவும் சீவகா ரியமோகம்
நாச மாக்கியவ் விவேகத்தின் உயிரொடு ஞானமுத் தர்களானுர்
பாச மோகங்கள் பசுக்களின் செயலன்றிப் பசுபதி செயலன்றே"

எனப் பகர்கின்றது.

அங்ஙனமாயின், ஈஸ்வரப்படைப்பு பொது என்றமையால் சீவர்க ளிடத்துப் பாரபட்சமேன்? எனில், தந்தை தன் மக்களை நேசித்தும் கண்டித்தும் வளர்ப்பதுபோல, சாத்திர நீதிநெறி வழுவுகின்றவர்களைத் திருத்தும்பொருட்டு கருணையினுல் வருத்துகின்றனனேயன்றி இது

பாரபட்சமன்று என்பதை, "நலமெய் ஐயனே எல்லவர்க்குந் தெய்வ நாயகன் பொதுவானுல் சிலரை வாழ்வித்தல் சிலரொடு கோபித்தல் செய்வதேன் என்ருயேல் குலவு மைந்தரைத் தந்தைபோற் சிட்டரைக் குளிர்ந்து துட்டரைக்காய்வன் கலைகள் நல்வழி வரச்செயுந் தண்டமுங் கருணையென் றறிவாயே" என விளக்கந்தருகின்றது.

எனவே இத்தகைய மோக வலையில் சிக்காமல் காக்கவேண்டு மென அனைத்து அடியார்களும் பரம்பொருளைத் தஞ்சம் புகுந்தனர். தாயுமானுருக்கும் ராணி மீனுட்சியால் இந்நிலை வந்தபோது இரவோடு இரவாக இராமநாதபுரம் விடுத்து இராமேஸ்வரம் புகுந்து, மலைவளர் காதலியாகிய உமையவளைநோக்கி

"தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே சிற்றிடையிலே நடையிலே சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே சிறுபிறை நுதற்கீற்றிலே பொட்டிலே அவர்கட்டுப் பட்டிலே............நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே நின்னடியர் கூட்டத்திலே நிலை பெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான நேயத்திலே உன் னிருதாள் மட்டிலே மனதுசெல நினதருளும் அருள்வையோ" என வேண்டினுர் என அறிகின்ருேம்.

தேவ தேவி தன் சபதம் நிறைவேறியதால் வெற்றிக்கொடி பிடித்துத் தன்வீடு திரும்பினுள். அவளைப் பிரிந்து தனித்திருக்க வியலாதவராகிய விப்பிரநாராயணரும் தொடர்ந்துசென்று அவர் வீட்டிலேயே அடிமை யெனக் கிடந்தார், காலத்தின் கோலம் அவரை ஏழ்மைநிலைப்படுத்தியது. அவளோ தாசி! "கையில் காசில்லாத வன் கடவுளானுலும் கதவைச் சாத்தடி" என்பதுபோல விப்ரநாரா யணரைப் புறக்கணித்தாள். அவள் வெறுத்தாலும் இவர் விடுவதாக இல்லை. திண்ணையே கதியெனக் கிடந்தார். இத்தன்மை வாய்ந்த பெண்டிரையே ஞானியர், சித்தர்களனைவரும் வெறுத்துப் பாடினர்.

"நாவார வேண்டும் விதஞ்சொல்லு வார்உனை நான்பிரிந்தால்
சாவேனென் றேயிருந் தொக்கவுண் பார்கள்கை தான்வறண்டால்
போய்வாரு மென்று நடுத்தலைக் கேகுட்டும் பூவையருக்(கு)
ஈவார் தலைவிதி யோவிறைவா கச்சியேகம்பனே"

இது பட்டினத்தார் கூற்று. விலைமாதருக்கேயன்றி பொதுவாக மகளிர் குலத்தைப் பழித்ததென்பது மாபெரும் தவருகும்.

இங்ஙனம் பெரிய மாயையில் அழுந்திக் கிடந்த விப்ரநாராயணரை விடுவிக்கத் திருவுளங் கொண்டார் ஸ்ரீமந் நாராயணன், விப்ரநாராய ணர், கொடுத்தனுப்பியதாக பொன்வட்டில் ஒன்றை தேவ தேவியிடம் கொடுத்தார் ஒருவர். அதைப் பெற்றுக்கொண்டதும் திண்ணையே கதியெனக்கிடந்தவரை வீட்டினுள் அழைத்துச்சென்று முன்னைய நாளினும் அதிகமாக அன்பைப்பொழிந்தாள் தேவ தேவி. கோவிலில் பொன்வட்டில் ஒன்று காணுததை குருக்கள் மன்னனிடம் முறையிட்ட னர். கோவில் பணியாட்கள் சிறை வைக்கப்பட்டனர். பணியாட்க ளுள் ஒருவனின் மனைவி தேவ தேவியின் வீட்டில் இருப்பதைக் கண்டு, தன் கணவனை விடுவிக்கும் பொருட்டு மன்னனிடம் தெரிவித் தாள். தேவ தேவி மன்னன்முன் நிறுத்தப்பட்டாள். அவளோ விப்ர

நாராயணரே தனக்குக் கொடுத்ததாகக் கூறினள். விப்ரநாராயணரை அழைத்து விசாரிக்க தனக்கு வட்டிலைப்பற்றி ஏதும் தெரியாது; தான் கொடுக்கவுமில்லை யெனக் கூறினர். அரசன் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தேவ தேவிக்கு அபராதமும் விப்ரநாராயணருக்குச் சிறை தண்டனையும் அளித்தான்.

சிறையில் அடைபட்ட விப்பிரநாராயணரின் அறிவுக்கண் அப்போதே திறந்தது. சுவற்றில் மோதிக்கொண்டு கதறியழுதார். ஆகா! வஞ்சகி தேவ தேவி நம்மால் பழிசுமத்திக் கெடுத்தாளே ! ஐயோ ! பெண்ணாசையால் மோசம் போனேனே! அற்ப ஆசைக்கு அடிமையானேனே ! என்று ஸ்ரீமந் நாராயணனை நினைந்துருகி நின்ருர். இகத்தில் சுகபோக வாழ்வுபெற்ற பெரும்பான்மையோர் இறையருளை மறந்து ஆணவத்தின் சிகரத்தில் இருப்பர். துன்பம் வந்து தாக்குகின்ற போதே இறைவனை நினைந்து வருந்துவர். தாயுமானவர் இக்கருத்தைக் "குறிகளோடு குணமேதுமின்றி" என்ற பாடலில்,

இரும்பை உலைக்களத்தில் இட்டபோது அதனோடு சேராமல் தன் தன்மையிழந்து ஒளிமயமாய் நிற்பதுபோல, ஆணவமாகிய வீட்டுக்குள் அறியும் தன்மையின்றி அறியாமையே உருவாக விருக்கின்ற அடியேனுக்கும் தனு கரண புவண போகங்களை அளித்தனை; அதனைப் பெற்று நினையறிந்து நின்னிடத்தினின்றும் நீங்காமல் நிற்கும் தன்மை பெருமல். தனக்கென வண்ணமின்றி பல நிறங்களையும் கவர்ந்து கொள்ளும் பளிங்குக் கல்லை யொத்து பெரியமாயையில் அழுந்திகிடக்கின்றேனே. நின் அருளாகிய பிரசாதத்தினையும் மறந்திருக்கின்ற அற்பனுகிய நான் நின்னுடன் இரண்டறக்கலந்து சுகமாவது எவ்வாறு? என பரம்பொருளைக் கேட்கின்ருர்.

சாதகன் ஆசாரியர் அளிக்கும் குறிப்பையே பார்த்திருத்தல் வேண்டும். அதுவே "கூடுதலுடன் பிரிதலற்று" என்ற பாடலில் கூறியுள்ளபடி தேடுதலு மற்றவிடமாகிய நிலைபெற்ற வீட்டிற்கு அழைத்துச் செல்கிறது. "குறிதான ளித்தனை நன் மரவுரிகொள் அந்தணக் கோலமாய் அசபா நலங் கூறி பின்மௌனியாய்ச் சும்மா இருக்க நெறி கூட்டினை எனவும் கூறியுள்ளார் தாயுமானவர் விறகு தீப்பட்டதும் எரிந்து நெருப்பாக சாம்பலாகிறது. அங்ஙனம் ஆசானிடம் பெற்ற குறியாகிய உபதேசம் சாதகனின் உழைப்புக்கேற்ப மாற்றமடைகிறது. பிரம்ம ஒளியைக் கண்டபின்னரும் மனோநிலைக்குத் திரும்பியபின் முக்குணங்களின்வழி சித்தவிருத்திகள் பற்றிக்கொள்ளும் மாமாயையின் சக்தி வலிமிகுந்தது !

மாமாயையின் சக்தியால் தாக்குண்ட விப்ரநாராயணர் தன் அறியாமையை நினைந்து நினைந்து விம்மினர். ஸ்ரீமந் நாராயணன் விப்ரநாராயணர் பால் கருணைகூர்ந்தார். அன்றிரவு அரசர் கனவினில் தோன்றி விப்பிரநாராயணர் குற்றமற்றவர் விடுவிக்க! என திருவாய் மலர்ந்தார். விடிந்ததும் விடுதலை யடைந்தார் விப்ரநாராயணர்.

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீ எடுத்துக் கொண்டுன்
உடலுயிராதிய வெல்லாம் உவந்தெனக்கே யளிப்பாய்

வடலூர்சிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே

என்று வடலூர் வள்ளற்பெருமான் வேண்டியாங்கு, விப்பிரநாராயணர், "பெருமானே! இனி இத்தகையதொரு துன்பம் இனியும் வேண்டேன். நீயோ எனக்கு மாயையைக் கொடுத்துத் துன்புறுத்துகின்றாய். எனவே நின்னடியர்க்கே தொண்டுசெய்து நின்னருளைப் பெறுவேன்" என்று கூறி தொண்டர்க்குத் தொண்டராகி 'தொண்டரடிப் பொடியாழ்வார் எனப்பெயர் பெற்றார். இறைவனுக்குப் பூமாலையோடு பாமாலையும் சாற்றினார்;

"மெய்யெலாம் போகவிட்டு விரிகுழ லாரிற்பட்டு
பொய்யெல்லாம் பொதிந்துகொண்ட போழ்க்கனேன் வந்துநின்றேன்
ஐயனே அரங்கனேஉன் னருளென்னும் ஆசைதன்னால்
பொய்யனேன் வந்துநின்றேன் பொய்யனேன் பொய்யனேனே"
—எனவும்,

"பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே"

என்றெல்லாம் திருமாலைப்பாடி திருப்பள்ளியெழுச்சியும் பாடி இறையோடு ஒன்றுகலந்தனர்.

தாயுமான அடிகள் இத்தகைய பொன், பொருள் பூவையர் எனப்படும் நிலையற்ற பொருள்களையே நிலையென எண்ணியிருக்கின்ற பாவியாகிய எனக்கு, இருளாம் அறியாமையை அகற்றி ஒளிநெறியாகிய ஒப்பற்ற நெறியை என்னுள் பதியச்செய்வது எக்காலமோ? என்பதை, "இருளைத் துரந்திட்டொளி நெறியாம் என்னுட் பதிப்பதென்று கொலோ"? என்று இப்பாடலில் வேண்டினர்.

பெயரிடுஞ் சடங்கு

யோகாசனாலய வடசென்னை கிளைச்செயலாளர் திரு. V.நரசிம்மன் அவர்களின் பெயர்த்திக்குப் பெயரிடுஞ் சடங்கு 5—2—78 ஞாயிறு காலை 10மணி யளவில் வண்ணை 14-C, முத்தைய முதலி சந்தில் நடைபெற்றது. யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமியவர்கள் வேத வேள்வி நடத்தி குழந்தைக்குக் 'கல்பனா' என்ற திருப்பெயர் சூட்டினர். யோகாசன ஆலய அன்பர்களும் சுற்றத்தினரும் வருகை தந்து குழந்தையும் பெற்றோரும் நீடுவாழ வாழ்த்தினர். V. நரசிம்மன் அவர்கள் நன்றிகூறினார்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

Develop within the WILL powers and follow the one goal-path which leads you to the Immortal Wisdom.
Develop within the Selfless Service and look-out Love (it means Divine kindness) way to cover the whole earth.
Be punctual for spiritual practicing and clearly look in-out from which comes the radiant Knowledge.
Be sure anything which you do, to do,
Be sure anything which within you is positive thoughts and taughts.
Develop the surest way and go-on with WILL, which is your great guidance, lover, protector and Self guidance.
Be sure to walk, find within without any negative ideas.
Be devotion, be spiritual practices, use the inner knowledge, cultivate within the divine forms, be radiant health through from the godly practices.
Walk straightly,
Wake up calmly,
Think up positively,
Do it at oncely,
Don't keep for postpone,
Be joyfully and keep in·touchingly,
Always look within and see it.
Always keep within the Guru,
Be always with God through the Guru's forms,
Your own thoughts are your life,
Your own breaths are Inner deeper life,
Your own creations are falsehoods,
Your own imaginations are life's balances,
Your own talkings are Inner heart's meaningless life,
Your own panickys are killer of your destiny.
Follow the positive rules and
read within-the-heart-knowledge.
Surrender with Guru and God, which is
the final goal for attaining the Supreme Self.

How wonderful in this *Heart*, how wonderful in this *practical*, how wonderful I am in this *world*, for I know to know by *myself*.

Yogi has all over the places his and is free,
He never fails to insure to have Divine home in his Heart,
My thoughts always within, and happy to enjoy within.
My food is great and Lord always with me to grant to have so,

There is no comparing about my life, because for Yogi, life
means his thoughts with the Almighty,
His work with the Almighty,
His devotional food, living with the Almighty,
His fountain knowledge with the Almighty,
His health and wealth with the Almighty,
His goal and the road with the Almighty.
His endless work with the Almighty.

Watch your mind, this is a great Yoga-life,
Watch your thoughts, this is a great Yoga-life,
Watch your problems, this is a great Yoga-life,
Watch your difficulties, this is a great Yoga-life,
Watch your obstacles, this is a great Yoga-life,
Watch your wants, this is a great Yoga-life,
Watch your wandering-mind, this is a great Yoga-life,
Watch your crazy-mind, this is a great Yoga-life,
Watch your Inner-freedom, this is a great Yoga-life,
Watch your each and every second, this is a great Yoga-life,
Watch your sleep, this is a great Yoga-life,
Watch your hunger, this is a great Yoga-life,
Watch your devotions, this is a great Yoga-life,
Watch your life, this is a great Yoga-life,
Watch your early-wake-up-mornings, this is a great
Yoga-life,
Watch your regular everyday practical, this is a great
Yoga-life,
Watch your Meditations, this is a great Yoga-life,
Watch your emotionals, this is a great Yoga-life,
Watch your happy-moods, this is a great Yoga-life,
Watch your anger, this is a great Yoga-life,
Watch your times, this is a great Yoga-life,
Watch your progress, this is a great Yoga-life,
Watch your relations, this is a great Yoga-life,
Watch your spiritual love, this is a great Yoga-life,
Watch your mind-entertainments, this is a great Yoga-life,
Watch your Divine-goal. this is a great Yoga-life,
Watch your foods, this is a great Yoga-life,
Watch your self-improvements, this is a great Yoga-life.
Watch your promises, this is a great Yoga-life.
Faith is a great House for the Spiritualists,
Intelligence and proper thoughts are great walls,
Meditations and self-culture are great red-bricks,
Spiritual-wisdom is a great Pillar of the house.
This is the way to attain the REALITY for whomever
follows the TRUTH.

சித்தர் கைகண்ட மருந்து

வைத்தியரத்னம் V. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

அப்பிரக செந்தூரம் செய்முறை

அப்பிரகத்தை சீமை குகையிலிட்டு வெங்காரம் கொடுத்து உருக்கி எடுக்கவும், உருக்கி எடுத்த அப்பிரகம் 50 கிராம், ரசம் 10 கிராம், கெந்தகம் 20 கிராம், சிலாசத்து 25 கிராம், பொரித்த முட்டையோடு 20 கிரரம்.

எல்லாவற்றையும் சேர்த்து பழச்சாறு விட்டரைத்து மூன்றுபுடம், குமரிச்சாறு விட்டரைத்து ஒரு புடம், செந்தூரம் கொஞ்சம் வெண்மையாக இருக்கும்.

பத்தியம். கடுகு, நல்லெண்ணெய், புளி, மீன், கருவாடு, கோழி கூடாது

மற்ரொரு முறை. சிறியா நங்கை மூலிகை சமூலம் சூர்ணம் செய்து குண்டுமணியளவு காலை, மாலை பசும்பாலுடன 20 நாட்களுக்குச் சாப்பிடவும். சாப்பிடும்போது உடலில் வெப்பம் அதிகமாய்க் கண்டால் மருந்தை நிறுத்திவிட்டு 10 நாட்கள் கழித்து மறுபடியும் மருந்தைத் தொடர்ந்து சாப்பிடவும் 40 நாட்களில் குணமாகும்.

புற்றுநோய்

சித்த மருத்துவத்தில் புற்று நோயைப்பற்றி விரிவாகக் சொல்லப் பட்டுள்ளது. இந்நோய் தாக்கப்படுவதற்குக் காரணம் இன்னும் மேனாட்டு மருத்துவத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. சித்த மருததுவத்தில் இந்நோய் ரத்தத்தின் கோளாறினால் உண்டாகுமென்று சொலலப்பட்டுளளது. ஒருவித நஞ்சு ரத்தததில் பரவி தடைபட்ட இடங்களில் புற்று உண்டாகிறது. ரத்ததத்தை சுத்தி செய்தால் இந்நோய் தானாகவே எமன் வாய்க்குப்போகும். புற்றுகளில் கன்னப்புற்று நாக்குப்புற்று, தொண்டைப்புறறு, லிங்கப்புற்று, வயிற்றுப்புறறு, யோனிப்புற்று என பலவித புறறுக்களைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதற்குப் பலவிதமான மருந்துகளையும், மூலிகைகளையும் பற்றி சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இதற்கு மருந்து. தாம்பிர பற்பம். பூநாக செந்தூரம், நேர்வாளம் கலந்த மாததிரைகள், மேலுக்கு பற்று, ஒத்தடம் முதலியன. ரசகெந்தி மெழுகு, நந்தி மெழுகு, வான் மெழுகு முதலிய மருந்துகள் வெகு விரைவில் ரத்தத்தை சுததிபடுத்தி புற்றுநோயைக் குணப்படுத்த வலலவை. சேங்கொட்டை சேர்ந்த மருந்துகள் புற்று நோய்க்குச் சிறந்தவை. மருத்துவர்கள் அவர்கள் யுக்திபோல் மேற்சொன்ன மருந்துகளை, வயது, பலமறிந்து பிரயோகஞ்செய்து புற்று நோய்களைக் குணப்படுத்தலாம்.

தாம்பிர பற்பம் செய்முறை

சுத்திசெய்த தாம்பிரத்தூள் 1 பங்கு, கெந்தி ½ பங்கு, ரசம் ¼ பங்கு, புத்தாஞ்சோறு 2 பங்கு.

எல்லாவற்றையும் பழச்சாறு விட்டரைத்து மூன்று புடம் போடவும் ஒவ்வொரு புடத்துக்கும் புத்தாஞ்சோறு அளவுப்படி கூட்டிக்கொள்ளவும் பற்பமாகும்,

அளவு. அரிசியிடையிலிருந்து ஒரு குன்றிமணியளவு வாத சரீரமுடையவர்களுக்கு தேனில், மற்றவர்களுக்கு பனைவெல்லத்தில் பயமின்றி கொடுக்கலாம்.

பத்தியம். புளி அறவே கூடாது. கடுகு, நல்லெண்ணெய், மீன், கருவாடு முதலிய மாமிச ஆகாரங்கள் கூடாது. வாழைப்பழம் சாப்பிடுதல் நல்லது. மருந்து சாப்பிடும் காலம் வரை குளிக்கக்கூடாது. வெந்நீரினால் உடம்பை துடைத்துக்கொள்ளலாம்,

மேற்பூச்சு: ஒத்தடம் (வெளிப் புற்றுக்கு)

புத்தாஞ்சோற்றைப் பொடித்து தண்ணீரில் கலக்கி பற்றுபோடவும். பச்சரிசி மாவை தண்ணீரில் கலக்கி கொஞ்சம் கரிமஞ்சள் தூள் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதம் வரும்போது எடுத்து இளஞ்சூட்டுடனிருக்கும்போது புற்று இருக்கும் இடத்திலும் அதைச் சுற்றியிருக்கும் இடங்களிலும் பற்றுபோடவும். இரவு பூராவும் இருக்கச்செய்து பிறகு எடுத்துவிடவும்.

ஒத்தடம், முருங்கை இலையையும், தேங்காய் திருவலையும் கூட்டி வதக்கி துணியில் முடிந்து புற்றுகண்ட இடத்தில் இளஞ்சூட்டுடன் ஒத்தடம் கொடுக்கவும். 48 நாட்களில் புற்றுநோய் அகலும்.

மேற்சொன்ன பூநாக செந்தூரமும் கொடுக்கலாம் பயமில்லை. ஆனால் குணம் தாமதமாகும்.

ஷ மருந்துகளைக் கொடுக்குமுன் வாளம் கலந்த ஏதாவதொரு மலம் கழியும் யாத்திரையைக் கொடுக்கவேண்டும்.

மேல்நாட்டு மருத்துவத்தில் அறுவை சிகிச்சை செய்தபின்னாவது அல்லது "கோபால்ட தெராபி" மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டபின்னாவது புற்று நோய் நோயாளிகளை, சித்த மருத்துவர்கள் அவ்வித கேஸுகளை சிகிச்சைக்கு எடுக்காமல் விடுவதே சிறந்தது. புற்று அணுக்களை சுடுவதென ஆரம்பித்து அதன் சுற்றிலுமுள்ள உயிர் அணுக்களையும் அவ்வித சிகிச்சையால் கொன்றுவிடுகிறார்கள். இது முற்றிலும் தவறான முறை. புற்று நோய்தானா இல்லையாவென கண்டு பிடிப்பதற்கு "Biopsy" எனும் ஓர் ஆபரேஷனைச் செய்கின்றனர். புற்று நோயுள்ள இடத்தில கத்தியால் ஒரு துண்டு அறுத்து அந்த மாமிசத்தை பரிட்சைசெய்து பார்ப்பதே "Biopsy", இதுவும் ஓர் ஆபத்தை உண்டாக்கும் வஷப்பரீட்சை. புற்று நோயிற்குள் கத்தி பட்டவுடன் புற்று அணுக்கள் லட்சக்கணக்கில அதிகமாகி புற்றுகண்ட இடம் ஆறாத ரணமாகி நோயாளியைக் கொன்றுவிடும். ஆபரேஷன கோபால்ட முதலியன புற்றுநோயைக் குணப்படுத்தும சிகிச்சைகள அல்லவென்பதை மேனாட்டு மருத்துவர்கள ஒத்துக்கொண்டும் அதே சிகிச்சையே அவர்கள் பின்பற்றி வருவது வருந்தத் தக்கதாயுள்ளது.

உலகத்திலேயே தலைசிறந்த ஒரு மருத்துவம் ஏதேனும் ஒன்று உண்டெனில் அது சித்த மருத்துவமேயாகும்.

சித்த மருத்துவம் உலகெங்கும் ஓங்குக !

ஆத்ம யோகம் -21

சென்னை ஆவடி H. V. F. எஸ்டேட் விஜயந்தா நர்சரி பள்ளியில், 26—1—78 அன்று, ஆவடி கிளையின் சார்பில் ஆத்மயோகம் நடை பெற்றது.

காலை 10 மணிக்குக் கிளைச்செயலர் திரு. M. செங்கல்வராயன் B.Sc. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். உயர்திரு சுவாமி அவர்கள் தலைமையில் வேதவேள்வி நடைபெற்றது. ஆவடி கிளை அங்கத்தினர், மகளிர்பிரிவு அங்கத்தினர்கள் யோக ஆசனங்கள் செய்துகாண்பித்த னர். திரு. V. A. கெங்குராஜ் நன்மைகளை விளக்கினார். புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் அருளிசை வழங்கினார். இடைவேளைக்குப் பிறகு மகளிர் இசைக் குழுவினரால் இன்னிசை நடைபெற்றதும், யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். சுருக்கம் வருமாறு;

இந்தியக் குடியரசு நன்னாளில் இன்று அமைதியை நிலைநாட்டி னோம். பிரார்த்தனை, வேள்வி, யோகாசனங்கள், பஜனை ஆகியவைக ளால் மனதைத் தூய்மைப் படுத்தினோம். இவ்வளவும் மனதை ஒரு நிலைப்படுத்தி சும்மா யிருக்கச் செய்வதற்கேயாகும். ஏ மனமே! கடலில் துரும்பு அலைவதுபோன்று உழல்கின்றாயே சும்மா இரு! என மனோபதேசம் செய்தல் வேண்டும். "ஆழித் துரும்பெனவே அங்கு மிங்கும் உன்னடிமை பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே " என தாயுமானாரும் வேண்டினார். 15 நிமிட நேரம் இப்போது மௌனமாக தியானத்தில் இருந்தோம், இதுவே அறிவு நிலையில் தனித்திருக்கப் பழகுவதாகும். அறிவாகிய கணவனுக்குப் பலமிருந்தால் மனைவியா கிய மனதைத் தன்வசப்படுத்த முடியும்.

தாயுமானவர் "பூதமொடு பழகிவளர் இந்திரியமாம் பேய்கள்" என்ற பாடலில், இந்திரிய முதலான பேய்கள் என் அறிவைப் பாழாக்கு கின்றனவே என் அறிவை நிலைநாட்ட மௌனமந்திரத்தை உபதே சிக்கலாகாதா? என தேவியை நினைந்து வேண்டுகின்றார். வள்ளலா ரும், "மாயையெனும் இரவில்" என்ற பாடலில், உமையவளை வேண்டி கலங்குகின்றார்; "புலன்களாகிய கள்வர்கள் மாயையாகிய இருளில் என் வீட்டுள் புகுந்து மன அடிமையைத் தன் வசப்படுத்தி அறிவா கிய விளக்கை அவித்து நான் சேமித்துவைத்த ஞானப்பொருள்களை யெல்லாம் கொள்ளைகொண்டு போய்விட்டனரே! ஐயோ அம்மா! நீதி யிலையோ தரும நெறியுமிலையோ என் செய்கேன்" என கதறுகின்றார்.

இத்தகைய துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு ஆசாரியர் 'ய' காரமாகிய தேவி எழுத்தின்வழி அறிவைத் தெளியச்செய்து மெய்ந் நெறிக்கு அழைத்துச்செல்கிறார். தெளிந்த ஞானியரிடத்துத் தஞ்சம் புகுந்தபோதே சிற்றறிவாளரும பேரறிவாளராகி மாறிவிடுவர் என்பதை கம்பநாட்டாழ்வார், இச் செய்யுளில் உவமை நயத்தோடு விளக்கி யுள்ளார்.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனும்இது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்உருள் உரைத்துரைத்தோடி
இருண்ட கல்லையும் தன்நிறம் ஆக்கிய இரதம்"

எனவே தெளிந்த ஞானியரோடு தொடர்பு கொண்டு அறியாமையை அகற்றி அறிவுநிலையைப் பெறவேண்டும் என்பதை கதை வாயிலாக கூறி முடித்தார்.

திருவாளர் சிவராமன் குட்டி அவர்கள் நன்றிகூற பிரார்த்தனையுடன் கூட்டம் நிறைவுற்றது. ஆவடி கிளை அங்கத்தினர்கள் சீரிய முறையில் ஆத்மயோகம் 21-நிகழ்ச்சியினை அமைத்தார்.

மாலை சிற்றுண்டி வழங்குவதற்காக திருவாளர் A. S. ஆதிநாராயணன், அவர்கன் ரூ. 101/- நன்கொடை வழங்கினுர்கள்.

திருமணம்



யோகாசன ஆலய அங்கத்தினர் திருவாளர் B. S, இராதாகிருஷ்ணனின் சகோதரரும் திருவாளர் R. சுப்பிரமணிய செட்டியார் அவர்களின் குமாரருமாகிய செல்வன் S. குப்புசாமிக்கும், சுண்ணும்பு குளம் தி. மு. காமாட்சி செட்டியார் அவர்களின் குமாரத்தி செல்வி இராஜேஸ்வரிக்கும், 12-2—78 ஞாயிறு காலை 10 மணி யளவில் சென்னை நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது.

இர. து. சந்தானம் அவர்கள் அனைவரையும் வரவேற்ருர். தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு நாஞ்சில், கி. மனோகரன் அவர்கள் சொன்மாலை புனைந்து மணமக்களை வாழ்த்தினுர். புலவர் வேதா, தஞ்சைத் தமிழ்வாணன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமான உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களிடம் மணமக்கள் ஆசி பெற்றனர். சுவாமி அவர்கள் மணமக்களை

வாழ்த்தி நல்லுரை பகன்றனர். யோகாசனாலய அன்பர்கள், நண்பர்கள், சுற்றம் சூழ வருகைதந்து 'அனைவரும் நல்வாழ்த்துக்களும் அன்பளிப்புகளும் அளித்து மனமகிழ்ந்தனர்.

திருவாளர் B. S. இராதாகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரை பகன்றபின் விருந்தோம்பல் நடைபெற்றது. மணமக்கள் நிறை செல்வத்துடன் நீடு வாழ வாழ்த்துகிறோம். இத் திருமண விழாவின் நினைவாக இம்மாத இதழ் வெளியிடப்பட்டது.

யோகாசன ஆலய அமைப்பாளர் திரு பி. வெங்கடேசன் அவர்களின் மூன்றாவது மகள் செல்வி தேவகிக்கும், மதுரை சுப்பையன் செட்டியார் மகன் செல்வன் கர்ணனுக்கும் 1-2-78 புதன்கிழமை காலை 6 மணியளவில், திருவொற்றியூர் இராமலிங்கசுவாமிகள் திருமண மண்டபத்தில் தெய்வீகத் திருமணம் நடைபெற்றது. தொழிலதிபர் உயர்திரு P, M. பிச்சை செட்டியார் அவர்கள் தலைமை வகித்தனர். யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் மணமக்களை வாழ்த்தியருளினர். மற்றும் யோகாசன ஆலய அன்பர்கள் நண்பர்கள் சுற்றத்தினரும் மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினர். திருவாளர் பி. வெங்கடேசன் அவர்கள் நன்றி நவின்றார்.

மகளிர் பஜனைப்பிரிவு கிளை தொடக்கம்



20—1—78 அன்று வண்ணையபதி சேணியம்மன் கோவிலில் மகளிர் பஜனைப்பிரிவு கிளை தொடக்கவிழாவின்போது எடுத்த படம்:

இடமிருந்து வலம்: திருமதி P. K. ஞானம், காளீஸ்வரி, இராஜேஸ்வரி மருதை, செல்வி R. சாந்தி, B. Sc., திருமதி விலாசவதி, இராஜம்மாள்.

38-ஆவது ஆண்டு விழா



14—1—78 அன்று யோகாசன ஆலய 38-ம் ஆண்டு விழாவின் போது எடுத்த படம்.

இடமிருந்து வலம்: திருவாளர் S. மருதை (தி இந்தியா மெட்டல் ஒர்க்ஸ் அதிபர்) உயர்திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் நீதிபதி (ஓய்வு) உயர்திரு கோ. மு. சுவாமி (தலைவர்-யோகாசன ஆலயம்).

நமவென்னு நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவ மென்னு நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்
பவமது தீரும் பரிசும தற்ருல்
அவமதி தீரும் அரும் பிறப் பன்ரே

'சிவயநம' என்னும் திருமந்திரந்தன்ஊ, 'சிவ' என்னும் இரண்டெழுத்தைச் சிந்தையுள் அழுத்தமாகப் பதித்து 'ய' கரத்தை மிடற்றில் (நெஞ்சில்) நிறுத்தி 'நம' என்பதை நாவின்கண் அடங்கி ஒடுங்குமாறு ஒடுக்கி, முறையாக ஓதுதல் வேண்டும். இங்ஙனம் ஓதிவர எஞ்சு விஊ, ஏறு விஊயாகிய இரண்டும் சேரா. அறியாமை அகலும்; பிறவாமையும் உண்டாகும்.

— திருமந்திரம்

அறிவிப்பு!

தாயுமானவர் திருப்பாடல் மனனப் பரிசு!

14-4-1978 சித்திரைத் திங்கள் முதல் நாளன்று நடைபெறவிருக்கும் மகரிஷி தாயுமானவர் திருவிழாவில், தாயுமானவர் திருப்பாடல்கள் மனனம் செய்தவர்களைப் பரிசீலஊசெய்து பரிசுகள் வழங்கப்படும். 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் 25, 50-ம் 12 வயதுக்கு மேற்பட்டோர் நூறும் அதற்குமேலும் ஒப்புவிக்கலாம். மனனம் செய்தோர் 31—3—78-க்குள், பாடலின் முதல் வார்த்தைகள் எழுதிய பட்டியலைத் தெளிவான முகவரியுடன் அனுப்பிவைக்கவும்.

1450 பாடல்கள் (நூல் முழுமையும்) மனனம் செய்தோர் 28—2—78-க்குள் தெரிவிக்கவேண்டும்.

அவர்கள் 11—3—78-ல் நடைபெறும் நிர்வாகக் குழுவில் பரிசீலிக்கப்படுவார்கள்.

அறிவிக்கவேண்டிய முகவரி :—

C. இராமசாமி,
பொதுச் செயலர்,
9/4, கிருஷ்ணபுரம்,
சென்ஊ - 600 094.

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 41, Broadway, Madras-600001 (February-1978)